Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154~~ Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082819

C

1. District : பெரம்பலூர் PS: ஊரகம் துப்பாக்கி மற்றும் வெடிபொருள் தடுப்பு பிரிவு Year: 2025 FIR No.: 04 Date: 16.05.2025
மாவட்டம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 14.05.25 Date to : 15.05.25
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 11 மணி முதல் Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 15.05.25 Time : 17.30 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 1½ கி.மீ தேற்கு வாசியின் வீட்டின் முன் தார்சாலை இடங்கி வரும் பாதை வாரியத்தின் பின் சாலையின் அருகாமை, 130A அம்பேத்கர் தெரு, பெரம்பலூர்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு P. வெங்கடேசன் (b) Father's/ Husband's Name : வெங்கடாசலம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 59/25 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address :
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. தினேஷ், வருவாய் ஆய்வாளர், பெரம்பலூர் உட்கோட்டம், அலுவலகம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு P. முருகன் 16-05-2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16/5/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.05.2025 0740 hrs

Name: பெயர் S. Saravanan
Rank: நிலை Inspector No. எண் .....
Vigilance and Anti Corruption,
Perambalur Detachment.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி, பெரம்பலூர்:

15.05.2025 தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது P.மெய்யன், என்பவர் என் முன் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார்தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர், P.மெய்யன், வயது 59/25, த/பெ பொன்னுசாமி, 130 A, கம்பன் தெரு, திருச்சி மெயின் ரோடு, பெரம்பலூர், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். ஐயா, நான் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், திருச்சி மெயின் ரோட்டில் அமைந்துள்ள கம்பன் தெருவில் கதவு எண் 130 A-ல் எனது மனைவி, மகன், மற்றும் மருமகளுடன் வசித்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் வீட்டின் முதல் தளத்தில் நான் நடத்தி வரும் ஸ்ரீ வளர்மதி பஸ் சர்வீஸ் அலுவலகம் வைத்துள்ளேன். மேலும் எனக்கு சொந்தமாக சில வீடுகள் உள்ளது. அவற்றில் வரும் வாடகையை கொண்டும் பஸ் சர்வீஸ் மூலம் கிடைக்கும் வருவாயை கொண்டும் வாழ்ந்து வருகிறேன். எனது மனைவி சின்னம்மாள் என்பவரின் உடன்பிறந்த அக்கா மலர்கொடி என்பவர் கடந்த 13 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது மகன் அவருக்கு முன்பே இறந்து விட்டார். எனவே எனது மனைவியின் அக்கா மலர்கொடி இறந்த பின்பு அவரது மகள் மகேஸ்வரி, வயது 40/2025, என்பவரை நானும் எனது மனைவியும் வளர்த்து துபாயில் வேலை செய்யும் முத்துசாமி என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். மாப்பிள்ளை முத்துசாமி 2 அல்லது 3 வருடங்களுக்கு ஒருமுறை தான் துபாயிலிருந்து ஊருக்கு வந்து செல்வார். மகேஸ்வரிக்கும் முத்துசாமிக்கும் 2 ஆண் பிள்ளைகள், அவர்கள் 11-ஆம் வகுப்பு மற்றும் 9-ஆம் வகுப்பு படித்து வருகின்றனர். எனவே திருமணத்திற்கு பின்பும் மகேஸ்வரிக்கு தேவையான உதவிகளை நான்தான் செய்து கொடுத்து வருகிறேன். மகேஸ்வரியின் அப்பா கலியன் 2 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். மகேஸ்வரி, 2012-ஆம் ஆண்டு கிரையம் பெற்ற No.98, அன்பு நகர், ஆலம்பாடி ரோடு, பெரம்பலூர் என்ற காலிமனையில் அவரது கணவர் அனுப்பும் பணத்திலும், என்னிடம் பெற்ற பணத்திலும் தற்போது அங்கு புதிய வீடுகட்டி முடித்துள்ளார். கடந்த 06.05.2025 ஆம் தேதி வீட்டுவரி இரசீது வேண்டி மகேஸ்வரி கணவர் பெயர் முத்துசாமி, No.98, அன்பு நகர், OHT அருகே, ஆலம்பாடி ரோடு, 621212, DIV-17, Ward-15, Service request No.089/CP/25-26/0000687, Assessment No.089/015/902241 ஆன்லைனில் விண்ணப்பித்தோம். பின்னர் பில் கலெக்டர் மணிமேகலை அவர்களை தொடர்பு கொண்ட போது, அவர் நேரில் வந்து இடத்தை பார்வையிட வேண்டும் என்று கூறி இடத்தை அளந்து பார்த்து சென்று விட்டார். பின்னர் பெரம்பலூர் நகராட்சியிலிருந்து வருவாய் ஆய்வாளர் கண்ணன் 14.05.2025 –ஆம் தேதி காலை 11.00 மணியளவில், எனது வீட்டின் முதல்தளத்தில் உள்ள எனது அலுவலகத்திற்கு வந்தார். மேற்படி வருவாய் ஆய்வாளர் கண்ணனை காலிமனை இரசீது பெற்றபோது தெரியும். மேற்படி வருவாய் ஆய்வாளர் கண்ணன் என்னிடம் மேற்படி புதிய வீட்டிற்கு வரிவிதிப்பு செய்ய வேறு

நபர்களுக்கு என்றால் ரூ.1,25,000/- ஆகும் எனவும், நீங்கள் என்பதால் ரூ.40,000/- கொடுத்தால் போதும் என லஞ்சம் கேட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. நான் அப்போது சூழ்நிலையை சமாளிப்பதற்காக சரி என்று சொல்லி அனுப்பி வைத்தேன். பின்னர் 15.05.2025 –ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் வருவாய் ஆய்வாளர் கண்ணனுக்கு போன் செய்து வீட்டு வரி இரசீது என்ன ஆனது என கேட்டபோது நேரில் வருகிறேன் என்று கூறி அன்று சுமார் 11.00 மணியளவில் என்னை எனது அலுவலகத்தில் வந்து சந்தித்தார், அவரிடம் நான் பணத்தை குறைத்து சொல்லுங்கள் அவ்வளவு பணம் மகேஸ்வரி தற்போது இல்லை என்கிறது என்றதும் இறுதியாக விதிக்கப்படும் வரிபோக ரூ.25,000/- கொடுங்கள் என்று லஞ்சம் கேட்டார். அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.25,000/- ஐ கொடுத்தால் 2 நாட்களில் வேலையை முடித்து இரசீது போட்டுக் கொடுப்பதாக கூறினார். மேலும் லஞ்ச பணத்தை எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. நான் அப்போது சூழ்நிலையை சமாளிப்பதற்காக சரி என்று சொல்லி அனுப்பி வைத்தேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்பதால் என்னிடம் லஞ்சம் கேட்ட பெரம்பலூர் நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக வேலைப் பார்க்கும் திரு.கண்ணன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அவர் என்னிடம் கேட்ட ரூ-25,000/- லஞ்ச பணத்துடன் 15.05.2025-ம் தேதி மாலை 17.30 மணிக்கு பெரம்பலூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் ஆஜராகி நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கிறேன். இப்படிக்கு, (sd **** P.மெய்யன் 15..05.2025) அந்த புகார் மனுவைப் பெற்று அதில் Sir, Received this Computer typed complaint from the complainant on 15.05.2025 at 17.30 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 16.05.2025 at 06.45 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.04/2025, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) S.Saravanan, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

16/5/25
(S. SARAVANAN)
Inspector of Police,
Vigilance and Anti Corruption.
Perambalur Detachment